**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் சித்திரை மாதம் 11ஆம் நாள்**

**அசல் வழக்கு எண்.74/2022**

[CNR.No.TNDG190002612022]

**(பழனி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.313/2016)**

[CNR.No.TNDG070006532016]

1. ஆர்.சாமியப்பன்
2. கே.வஞ்சாத்தாள் ... வாதிகள்

// எதிராக //

1. பி.கார்த்திகைவேல்
2. கே.சிவக்குமார்
3. செ.சரண்யா
4. கே.காளியம்மாள் (இறப்பு)
5. எஸ்.தங்கம்மாள் (இறப்பு)
6. கே.பாக்கியம்
7. பி.அருள்மொழி
8. கே.திருலோகச்சந்திரன்
9. கே.ராமலிங்கம்
10. நடராஜன்
11. வனிதாமணி
12. சுப்பிரமணி
13. சரண்யா

14.இந்திராணி

15.ராஜ்குமார் .... பிரதிவாதிகள்

(4ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் இ.ம.எண்.480/2022ல் 28.08.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 10, 11 பிரதிவாதிகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.)

(இ.ம.எண்.641/2023ல் கடந்த 20.10.2025ம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி வழக்குரையில் முதன் முறையாக திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது)

(5ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் இ.ம.எண்.762/2024ல் கடந்த 14.03.2025ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 12 முதல் 15 பிரதிவாதிகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.)

(இ.ம.எண்.231/2025ல் கடந்த 20.03.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி வழக்குரையில் இரண்டாம் முறையாக திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது)

இந்த வழக்கானது கடந்த 22.08.2016ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, அன்றே மாண்புமிகு பழனி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.313/2016 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு ஆள்வரை எல்லையின் காரணமாக மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் அவர்களின் அ.எண்.137/21/ஏ1. தேதி 15.12.2021ம் தேதிய உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.74/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 03.03.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.R.கிருஷ்ணன் அவர்கள் முன்னைிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் கடந்த 29.08.2017ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், 4ம் பிரதிவாதி கடந்த 05.01.2022ம் தேதியிலும், 5ம் பிரதிவாதி கடந்த 21.04.2023ம் தேதியிலும் இறந்துவிட்டார்கள். 6 முதல் 9 மற்றும் 12 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.V.பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 10 மற்றும் 11 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைத்தும்

முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 18.04.2024ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், வழக்குரை, எதிர்வழக்குரை, சாட்சியங்கள், சான்றாவணங்கள், வழக்குகோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

1. இவ்வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், வழக்கின் செலவு தொகையும் வேண்டி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்த செய்த வழக்குரையின் சுருக்கம் :**

1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் ஆவார். 4 முதல் 7 பிரதிவாதிகள் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள். 8, 9 பிரதிவாதிகள், 4 முதல் 7 பிரதிவாதிகளின் உடன்பிறந்த சகோதரியான லேட்.பழனியம்மாளின் மகன்கள் ஆவார்கள். ஓட்டன்சத்திரம் கிராமம், சர்வே எண்.424/2–ல் ஏக்கர் 0.29 செண்ட் உள்ள நிலமும், இதர சொத்துக்களும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களை பொறுத்து 1–ம்பிரதிவாதி தனது மகன் 2ம் பிரதிவாதிக்கு பாதுகாவலராக இருந்தும், 1–ம்பிரதிவாதியின் சகோதரர் தங்கவேல், அவரது சகோதரி முத்தம்மாள் தனக்காகவும், தனது மைனர் மகன் தேவசேனாதிபதிக்கு பாதுகாவலராகவும், தாயார் செல்லம்மாள் ஆகிய அனைவரும் சேர்ந்து சென்ற 30.10.1982–ம் தேதிய பதிவு பாகப்பிரிவினை ஆவணத்தின்படி சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டதில் 'ஏ' பட்டியல் சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி சர்வே எண்.424/2–ல் ஏக்கர் 0.29 செண்ட் நிலம் 'ஏ' பட்டியல் சொத்துக்களில் 2–வது அயிட்ட சொத்தாக பிரிக்கப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகின்றது. கடந்த 1984–ம் ஆண்டு ஏற்பட்ட நிலவுடமை பதிவு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சர்வே எண்.424/2 என்பது 424/2ஏ, 424/2பி மற்றும் 424/2சி என்று உட்பிரிவுகள்

செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.424/2சி–ல் ஹெக்டேர்.0.07.5–க்கு 1–ம்பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. அதன்பின் 1ம் பிரதிவாதி சர்வே எண்.424/2–ல் தென்வடல் 10 அடி அகலம், கிழமேல் 100 அடி நீளம் விஸ்தீரணம் உள்ள சொத்தை ஒட்டன்சத்திரம் பேரூராட்சி நிர்வாகத்திற்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரோடு வசதிக்காக கடந்த 14.12.1990–ம் தேதி பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணம் வழியாக பாத்தியப்படுத்தியுள்ளார். பின்னர் 1ம் பிரதிவாதி தனக்காகவும், அப்போது மைனர்களாக இருந்த தன் மக்களான 2, 3 பிரதிவாதிகளுக்கு கார்டியனாகவும் இருந்து தாவா 1 வது அயிட்ட சொத்தை 1ம் வாதிக்கு சென்ற 06.12.1996–ம் தேதி பதிவு கிரைய ஆவணம் வழியாகவும், 2வது அயிட்ட சொத்தை 2ம்வாதிக்கு கிரைய ஆவணம் வழியாகவும் கிரையம் செய்து கொடுத்துள்ளார். வாதிகள் அவரவர்களுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட வழக்குச்சொத்துக்களை அனுபவித்தும், சுவாதீனத்திலும் இருந்து வருகின்றார்கள். வழக்கு சொத்துக்களை வாதிகள் கிரையம் பெறும் முன்பு வழக்கு சொத்துக்களில் வில்லங்கம் ஏதும் கிடையாது என்ற விபரத்தையும் தெரிந்த பின்னர் தான் கிரையம் பெற்றுள்ளனர். 1ம் வாதி வழக்கு 1லக்க சொத்தை கிரையம் பெறும் முன்பு சொத்து சம்மந்தமாக 1–ம் பிரதிவாதியிடம் கடந்த 29–10–1993–ம் தேதிய பதிவு கிரைய உடன்படிக்கை ஆவணமும், அதன் பின்னர் கடந்த 24–10–1994–ம் தேதிய பதிவு கிரைய ஏற்படுத்திக்கொண்டு உடன்படிக்கை கெடு ஆவணமும் கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் கண்டுள்ள சரத்துக்களின்படி வழக்கு 1–லக்க சொத்தை பிரதிவாதிகளிடம் கிரையம் பெற்றுள்ளார். வழக்குச் சொத்துக்கள் காலியிடமாக இருப்பதால் ஒட்டன்சத்திரம் பேரூராட்சி நிர்வாகத்தால் சொத்துக்களுக்கு வரிவிதிப்பு செய்யப்படவில்லை. வழக்குச்சொத்துக்களில் வாதிகளை தவிர வேறு யாருக்கும் எந்தவித பாத்தியமோ, உரிமையோ கிடையாது. வழக்குச்சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகள் அனைவரும் மூன்றாம் நபர்கள் ஆவார்கள். 4 முதல் 7 பிரதிவாதிகளின் தகப்பனாரும், 8,9 பிரதிவாதிகளின் தாயாரை பெற்ற பாட்டனாருமான பெரியண கவுண்டர் என்பவர் பிரதிவாதிக்கு பங்காளி என்ற முறையில் 4 முதல் 9 பிரதிவாதிகள், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நெருங்கிய உறவினர்கள் ஆவார்கள். வாதிகள் கிரையம் பெற்றுள்ள வழக்குரை சொத்துக்களை ஒட்டி வடபுறம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு

பாத்தியப்பட்ட சொத்தும், கிழபுறமும், தென்புறமும் 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தும் உள்ளது. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட வழக்குரை சொத்துக்களுக்கு அருகில் இருப்பதால் வழக்குச்சொத்துக்களை பிரதிவாதிகள் கிரையத்திற்கு கேட்டு வாதிகள் மறுத்துள்ளனர். வழக்கு சொத்துக்களை வாதிகளிடமிருந்து அபகரிக்கும் நோக்குடன் வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு யாதொரு பாத்தியமும் கிடையாது என்றும், முதாதையர்கள் சொத்துக்கள் பிரதிவாதிகளின் மூலம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதென்றும் கூறி வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்கு இருந்து வரும் உரிமையை சட்டவிரோதமாக மறுத்து வருகின்றனர். 1ம் வாதி தாவா 1 லக்க சொத்திற்கு பதிவு அலுவலகம் மூலம் கடந்த 01–01–1926–ம் தேதி முதல் 19–06–2016– தேதி முடிய வில்லங்கச்சான்று பெற்று பார்த்ததில் வழக்குச்சொத்துக்கள் வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ள 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும், அவர்களின் முன்பாத்தியஸ்தர்களுக்கும் பாத்தியப்பட்டுள்ள விபரமும், வாதிகள் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ள விபரமும் தெரியவந்துள்ளது. வழக்குச் சொத்துக்களை வாதிகள், பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்ய மறுத்ததால் பிரதிவாதிகள், வாதிகள் மீது விரோதம் கொண்டு வழக்குச்சொத்துக்களில் வாதிகளின் அனுபவ சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்ததை வாதிகள் தடுத்துவிட்டனர். கடந்த 25–07–2016–ம் தேதி வாதிகள் இருவரும் வழக்குச்சொத்துக்களில் உள்ள மேடு, பள்ளங்களை சரி செய்ய வண்டி மூலம் மண் கொண்டு வந்து சொத்துக்களை சமப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது பிரதிவாதிகள் வழக்குச்சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து வாதிகளின் அனுபவ சுவாதீனத்திற்கு இடைஞ்சல்கள் செய்ததை வாதிகள் தடுத்துவிட்டனர். எனவே தாவா 1–லக்க சொத்து 1 ம்வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென்றும், 2–லக்க சொத்து 2–ம்வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென்று விளம்புகை பரிகாரம் வேண்டியும், அதன் தொடர்பாக தாவா சொத்துக்களில் வாதிகளின் அனுபவ சுவாதீனத்திற்கு பிரதிவாதிகளோ அவர்களின் ஆட்களோ எந்தவித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 7ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 4 முதல் 6, 8, 9 மற்றும் 14 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்:**

வழக்கு சொத்துக்கள் ஆதியில் வாதிகளின் கிரையதாரரான 1–ம் பிரதிவாதிக்கும், 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் மற்றும் 8,9 பிரதிவாதிகளின் தாயாரான பழனியம்மாள் ஆகியோரின் தந்தைக்கும், பொதுவில் பாத்தியப்பட்டிருந்த பூர்வீக சொத்துக்களின் ஒரு பகுதி என்பது உண்மை. 1–ம் பிரதிவாதி பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.277/1993–ல் வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் குறித்து விளம்புகை பரிகாரம் வேண்டி பழனியப்பகவுண்டர் மகன் பெரியணகவுண்டர் என்பவர் மீது தொடர்ந்த வழக்கில் கடந்த 07.10.1996ம் தேதி தீர்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த தீர்பாணையின்படி வழக்கு சொத்துக்களின் 15 செண்ட் நீங்கலாக மற்ற சொத்துக்கள் மட்டும் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பின் மீது வாதி மே.வ.எண்: 17/1997–ல் தொடர்ந்த வழக்கு 19.03.2003 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண்.277/93 –ல் பிரதிவாதியாக உள்ள பெரியணகவுண்டர் என்பவர் 4 முதல் 7 வரையுள்ள பிரதிவாதிகளின் தந்தையும், 8,9 பிரதிவாதிகளின் தாயார் பழனியம்மாள் வழி தாத்தாவும் ஆவார். இந்த தீர்ப்பின்படி வழக்கு சொத்துக்களில் 15 செண்ட் நிலங்கள் 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு பட்டா எண்.1131–ல் தனி பட்டா வழங்கப்பட்டுள்ளது. 1–ம் வாதி ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அவர்களிடம் வழக்கு சொத்துக்கள் குறித்து தனக்கு கூட்டுப்பட்டா வழங்க கேட்டு மனு செய்து, அதில் 04.12.2015 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் குறித்து நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு வாதிகள் 1–ம் பிரதிவாதியிடமிருந்து 06.12.1996–ல் ஏற்படுத்திக்கொண்ட கிரையம் மலரணையதாகும். 1–ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்துக்களில் 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட 15 செண்ட் நிலங்களை கிரையம் செய்து கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை. உரிமையோ, பாத்தியமோ, அனுபவமோ இல்லாத சொத்துக்களுக்கு வில்லங்கம் பார்த்து வாங்கியதாக வாதிகள் கூறியுள்ளது தவறு. வழக்கு சொத்துக்களை ஒருபோதும் வாதிகள் அனுபவிக்கவில்லை. ஒட்டன்சத்திரம் பேரூராட்சி நிர்வாகத்திற்கு

04.02.1990ம் தேதி பிரதிவாதி தானசெட்டில்மெண்ட்டாக எழுதிக்கொடுத்துள்ளதும், சட்டப்படி ஏற்றுக் கொள்ளதக்கதல்ல. 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ள ஒரு பகுதியின் வழியாக ஒட்டன்சத்திரம் பேரூராட்சி சாலை வசதி செய்து கொடுத்துள்ளதை 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் பொது நன்மை கருதி ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. 1–ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு சொத்துக்கள் குறித்து தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் வாதிகளுக்கு உரிமையில்லாத சொத்தை தெரிந்தே கிரையப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளார். வாதிகளுக்கு விவரங்கள் அனைத்தும் தெரிந்தே 4 முதல் 9 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கில் கிரையப்பத்திரத்தை உருவாக்கியுள்ளனர். 25.07.2016 அன்றோ வேறு தேதியிலோ வாதிகள் வழக்கு சொத்தில் மேடு பள்ளங்களை சரிசெய்யவோ அல்லது வேறு எவ்வித வேலையோ செய்யவில்லை. வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து, கடந்த 01.09.2020ஆம் தேதி கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.**

<u>எழுவினாக்கள் :</u>

1. **வழக்கு 1வது இலக்க சொத்து 1ம் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டதா?**
2. **வழக்கு 2வது இலக்க சொத்து 2ம் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டதா?**
3. **வழக்கு சொத்துக்களில் வாதிகளின் அனுபவ சுவாதீனத்திற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கத்தக்கதா?**
4. **வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

**5.** வாதிகள் தரப்பில், 1ம் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்தும், வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்தும், பிரதிவாதிகள் தரப்பில், 8ம் பிரதிவாதி தன்னை பி.வா.சா.1 ஆக விசாரித்து, பி.வா.சா.1 என்பவரின் சாட்சியத்துடன் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**6.** அசல் வழக்கில் தாவா 1 மற்றும் 2 லக்க சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில், விளம்புகை பரிகாரத்தை பொறுத்த எழுவினாக்கள் வனையப்படாமல் உள்ளதால். உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 14விதி 5ன் நோக்கெல்லைக்குட்பட்டு கீழ்கண்டவாறு எழுவினாக்கள் திருத்தி வனையப்படுகிறது.

**7. திருத்தி வனையப்பட்ட எழுவினாக்கள் நாள் : 24.04.2026**

**1. தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

**2. தாவா சொத்தை பொறுத்து வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

**3. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

**8.** ஏற்கனவே இரு தரப்பிலும், திருத்தி வனையப்பட்ட எழுவினாக்களை பொறுத்து போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தியிருப்பதால், திருத்தியமைக்கப்பட்ட எழுவினாக்களை பொறுத்து விசாரணை வாய்ப்பினை தவிர்த்து இன்று தீர்ப்புரை பகரப்படுகிறது.

**9. பிரச்சனைக்கான தீர்வுகள் :**

**1. எழுவினா 1க்கான தீர்வு: தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

**1.1.** தாவா சொத்துக்கள் என்பது ஒட்டன்சத்திரம் கிராமம், சர்வே எண்.424/2சி என்ற புலத்தில் 1ம் வாதி சாமியப்பன் பெயரில் உள்ள 1லக்க சொத்தான 10 செண்ட் அளவிற்கு உள்ள 4360 சதுரடி நிலமும், சர்வே எண்.424/2சி என்ற புலத்தில் 2ம் வாதி வஞ்சாத்தாள் பெயரில் உள்ள 2 லக்க சொத்தான 5 1/4 செண்ட் உள்ள 2289 சதுரடி நிலமும் தாவா சொத்துக்கள் ஆகும்.

**1.2.** தாவா சொத்துக்கள் கடந்த 30.10.1982ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் வழியாக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டதின் வழியாக 1ம் பிரதிவாதி குடும்பத்திற்கு கிடைக்கப்பெற்றதில், சர்வே

எண்.424/2 என்ற புலமானது பல உட்பிரிவுகளாக ஏற்படுத்தப்பட்டதில் சர்வே எண்.424/2சி என்ற புலத்தில் தாவா சொத்து உள்ளது என்றும், 1ம் பிரதிவாதி தனக்காகவும், 2, 3 மைனர்கள் பிரதிவாதிகளுக்கு பாதுகாவலராகவும் இருந்து கடந்த 06.12.1996ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்கள் வழியாக வாதிகளுக்கு முறையே வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் வழியாக கிரையம் ஏற்படுத்திக் கொடுத்ததாகவும், கிரைய ஆவணத்தின் தன்மைப்படி நாளது தேதி வரை வாதிகளின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருப்பதாகவும், இந்த பிரதிவாதிகள் வாதிகளின் சொத்திற்கு அருகாமையில் உள்ள நில உரிமையாளர்கள் என்றும், வாதிகளின் அனுபவத்தை இடையூறு செய்ய முற்படுவதாகவும், வாதிகளின் வழக்கானது முன்னெடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

**1.3.** தாவா சொத்துக்களை பொறுத்து இவ்வழக்கு 1ம் பிரதிவாதி பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.277/1993 வழக்கு தாக்கல் செய்து, தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து ஒரு பழனியப்ப கவுண்டர் மகன் பெரியண கவுண்டர் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், அந்த வழக்கில் கடந்த 07.10.1996அன்று தாவா சொத்துக்களான 15 செண்ட் நிலம் நீங்கலாக மற்ற சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பின் பேரில் 1ம் பிரதிவாதி A.S.No.17/1997 என்ற வழக்கு தொடர்ந்ததாகவும், அந்த வழக்கும் கடந்த 19.03.2003ம் தேதி தள்ளுபடி ஏற்பட்டுவிட்டது என்றும், தாவா சொத்துக்களை பொறுத்து 4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கு பாத்தியப்படுத்தி, பட்டா எண்.1131ல் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் இருந்து ஏற்படுத்திக்கொண்ட 06.12.1996ம் தேதியிட்ட வாதிகளின் இரண்டு கிரைய ஆவணங்களும் பெயரளவில் ஏற்பட்ட ஆவணங்கள் என்றும், 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட 15 1/4செண்ட் நிலத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றும், 4 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கானது முன்னெடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

**1.4.** வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 1ம் வாதி தாவா சொத்துக்களை பொறுத்து, 1ம் பிரதிவாதியிடம் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தம் மற்றும் கிரைய உடன்படிக்கை கால நீட்டிப்பு பத்திரமாகும். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, 1ம் வாதி தாவா 1 லக்க சொத்தினை ஒட்டன்சத்திரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2075/1996 என்ற வா.சா.ஆ.5 ஆவணத்தின் வழியாகவும், 2ம் வாதி தாவா 2 லக்க சொத்தினை ஒட்டன்சத்திரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2076/1996 என்ற வா.சா.ஆ.6 ஆவணத்தின் வழியாகவும் கடந்த 06.12.1996ம் தேதியில் கிரையம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. தாவா சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு முன்பாக 1ம் வாதி சொத்திற்கான வில்லங்கத்தை பார்வையிட்டு கிரையம் பெற்றுள்ளார் என்பது வா.சா.ஆ.8 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது.

**1.5.** பிரதிவாதிகள் தரப்பில் 6 முதல் 9 மற்றும் 12 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான பழனிச்சாமி கவுண்டர் மகன் கார்த்திகைவேல் என்பவர் வாதியாக இருந்து கடந்த 01.04.1993ம்தேதியில் பழனியப்ப கவுண்டர் மகன் பி.பெரியண கவுண்டர் பெயரில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனியில் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.277/1993 வழக்கில், சர்வே எண்.424/2A, 424/2B, 424/2C என்ற புலங்களை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டிருந்ததில், (1) எ.சா.ஆ.1ல் கண்டுள்ள மஞ்சள் வண்ணமிட்ட "ஏ" பகுதியில் 0.15 செண்ட் நீங்கலாக மற்ற சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யப்படுகிறது என்றும், (4).எ.சா.ஆ.1 இந்த வழக்கின் தீர்ப்பாணையின் ஓர் அங்கமாக கருதப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது.

**1.6.** பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியாக உள்ள பழனிச்சாமி கவுண்டர் மகன் பி.கார்த்திகைவேலு என்பவர் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவார். அ.வ.எண்.277/1993 என்ற வழக்கின் பிரதிவாதி பி.பெரியண கவுண்டர் யார் என்று பார்க்கும்போது, வா.சா.1 என்பவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொண்டபோது, **"அ.வ.எண்.277/1993 என்ற வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகளின் தகப்பனாரும், 8, 9 பிரதிவாதிகளின் பழனியம்மாள் வழி தாத்தா பெரியண கவுண்டர் பிரதிவாதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது."** என்றும், மேலும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணையில்,**"தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் 1ம் பிரதிவாதி கார்த்திகைவேல் மற்ற பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களான பெரியண கவுண்டருக்கும், பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ? பங்காளிகள் என்று தெரியும். சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது."** என்று சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். எனவே, வாதிகளுக்கு சொத்தினை விற்பனை செய்த 1ம் பிரதிவாதியும், 4 முதல் 7 மற்றும் 8, 9 பிரதிவாதிகளின் தாயாரான பழனியம்மாள் என்பவரின் முன்னோர்தான் பெரியண கவுண்டர் என்பது வாதிகள் முன்னிலைப்படுத்தியுள்ள வழக்குரை சங்கதிகளில் இருந்தும், வா.சா.1 என்பவரின் சாட்சியத்தில் இருந்தும் அறிய முடிகிறது. 1ம் பிரதிவாதியும், பெரியண கவுண்டரும் பங்காளிகள் என்பதும், பங்காளிகளுக்குள் தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் கூட்டாக பாத்தியம் ஏற்பட்டிருந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

**1.7.** பி.வா.சா.ஆ.1 ஆவணமான அ.வ.எண்.277/1993 வழக்கின் தீர்ப்பாணையின் தன்மைப்படி, சர்வே எண்.424என்ற புலத்தில் மஞ்சள் வண்ணமிட்ட பகுதியில் உள்ள 15 செண்ட் நீங்கலாக மற்ற சொத்துக்கள் வாதிக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ள நிலையில், சர்வே எண்.424 என்ற புலமானது அ.வ.எண்.277/1993 வழக்கு தாக்கல் செய்த போதே சர்வே எண்.424/2A, 2B, 2C என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதில் மஞ்சள் வண்ணமிட்ட பகுதியானது 424/2C ஆக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள வரைபடத்தில் கண்டுள்ளதை அறிய முடிகிறது. இவ்வழக்கு 1ம் பிரதிவாதி அ.வ.எண்.277/1993 என்ற வழக்கினை வாதியாக இருந்து தாக்கல் செய்து

மேற்படி வழக்கில் வாதியான, இவ்வழக்கு 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.424/2A, 2B என்ற புலங்கள் மட்டுமே பாத்தியம் ஏற்பட்டுள்ளதை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது.

**1.8.** பி.வா.சா.ஆ.1 ஆவணமான அசல் வழக்கு எண்.277/1993 என்ற வழக்கின்பேரில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு வழக்கான A.S.No.17/1997 என்ற வழக்கும் 19.03.2003ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ள நிலையில், மேற்படி சங்கதிகளை வாதிகள் தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்தோ அல்லது தகுந்த சாட்சியங்கள் வழியாகவோ நிராகரிக்கவில்லை. மேலும், வாதிகள் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சியத்திலும், பிரதிவாதிகள் சொல்லியுள்ள வழக்கின் நிலைப்பாடுகள் பற்றி மறுத்து எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக இருந்துள்ளது வாதியின் வழக்கிற்கு வலுச்சேர்க்கும் விதமாக இல்லை.

**1.9.** தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே அ.வ.எண்.277/1993 என்ற வழக்கில் 1ம் பிரதிவாதிக்கும், 4 முதல் 15 பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தரான பெரியண கவுண்டருக்கும் இடையே நிரந்தரமான தீர்வு கண்டு தாவா சர்வே எண்.424/2Cல் 1ம் பிரதிவாதிக்கு எந்தவித பாத்தியமும் இல்லை என்று கடந்த 07.10.1996ம் தேதி தீர்முடிவு கண்டுள்ள நிலையில், தாவா 1 மற்றும் 2 லக்க சொத்துக்களை பொறுத்து அனைத்து விபரங்களையும் தெரிந்து கொண்ட 1ம் பிரதிவாதி தனது வாரிசுகளுக்கு பாதுகாவலராக இருந்து வாதிகளுக்கு வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் வழியாக கடந்த 06.12.1996ம் தேதியில் வாதிகளுக்கு கிரையம் ஏற்படுத்தி வைத்துள்ளது ஏற்புடையதல்ல.

**1.10.** 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு விற்பனை செய்த வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆகிய இரண்டு கிரைய ஆவணங்களும் ஒரே நாளில் ஏற்படுத்தி கொடுத்துள்ள நிலையில், மேற்படி கிரைய ஆவணங்களில்,"**கிரைய சொத்தை பொறுத்து எவ்வித வில்லங்கமும் இல்லை என்று உறுதி கூறுகிறேன். பின்னால் ஏதேனும் மேற்படி கிரைய சொத்தை பொறுத்து வில்லங்கம் ஏற்பட்டால் என்னுடைய**

**செலவிலும், பொறுப்பிலும் தீர்த்து கொடுப்பேனாகவும்"** என்று குறிப்பிட்டு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். வாதிகளுக்கு கிரைய ஆவணம் எழுதும்போதே அ.வ.எண்.277/1993 என்ற வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கபட்ட விபரம் 1ம் பிரதிவாதிக்கு நன்கு தெரிந்துள்ள காரணத்தினால் தான் 1ம் பிரதிவாதி மேற்படி தீர்ப்பின் பேரில்மேல்முறையீட்டு வழக்கு A.S.17/1997 வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கும் 19.03.2003ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**1.11.** வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் வாதிடும்போது, தாவா சொத்துக்கள் நிர்வில்லங்க சொத்துக்கள் என்றும், வாதிகள் கிரையம் பெற்றபோது தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை பார்வையிட்டு வாங்கியதாகவும், சொத்துக்கள் நிர்வில்லங்க சொத்துக்கள் என்பதால் வாதிகள் கிரையம் பெற்றதாகவும், ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையானது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் வாதிட்டார்.

**1.12.** வாதிகள் சொத்தினை நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றதாக வாதிகள் தரப்பு வாதத்திற்கு ஏற்ப வைத்துக்கொண்டாலும், வாதிகள் கிரையம் பெற்ற வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் மேலோங்கியதா அல்லது நீதிமன்றத்தின் தீர்ப்பாணையான பி.வா.சா.ஆ.1 மேலோங்கியதா என்று பார்க்கும்போது, பி.வா.சா.ஆ.1 தீர்ப்பாணையே மேலோங்கியதாகும். 1ம் பிரதிவாதி சொத்துக்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்து, தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட பின்னர் தீர்ப்பினை பற்றி கிரைய ஆவணங்களில் குறிப்பிடாமல் சொத்தினை விற்பனை செய்துள்ளதாலும், வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 கிரைய ஆவணங்களின் சரத்துக்களில் வில்லங்கம் ஏற்பட்டால் சொந்த செலவில் தீர்த்து கொடுப்பதாக சொல்லியுள்ள நிலையில், வாதிகள் 1ம் பிரதிவாதியின் இதர சொத்துக்களின் பேரில் ஈடு செய்து கொள்ள உரிமையுடையவர்கள் ஆவார்கள். தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே 4 முதல் 12 பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தரான பெரியண கவுண்டருக்கு பாத்தியம் ஏற்பட்டுள்ள நிலையில், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு உரிமை பாத்தியம் இல்லாத சொத்தினை வாதிகளுக்கு விற்பனை செய்துள்ளதாலும், அந்த சொத்தான தாவா சொத்தினை வாதிகள் கிரையம் பெற்றுள்ளதாலும், வாதிகளின் கிரைய ஆவணம் சரியான கிரைய

ஆவணம் என்று கருத இயலாது. எனவே, தாவா சொத்துக்கள் 4 முதல் 12 பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தரான பெரியண கவுண்டருக்கு அ.வ.எண்.277/1993 என்ற வழக்கில் பாத்தியப்படுத்தி தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் வாதிகள் கோரக்கூடிய விளம்புகை பரிகாரம் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**2. எழுவினா 2க்கான தீர்வு : தாவா சொத்தை பொறுத்து வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

மேலே கண்ட எழுவினாவில் தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை பொறுத்து பெரியண கவுண்டரின் வாரிசுகள் பெயரில் பட்டா எண்.1131 என்ற எண்ணில் சர்வே எண்.424/2C2 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதை பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது. எனவே, தாவா சொத்துக்கள் 4 முதல் 8 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்பது பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது. ஒரு சொத்திற்கு உரிமை மூலமானது சரியான உரிமை மாற்று ஆவணத்தின் வழியாக ஏற்பட்டிருக்க வேண்டும். நீதிமன்ற தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட விபரத்தை மறைத்து 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுத்துள்ள நிலையில், தாவா சொத்தினை சரியான ஆவணத்தின் வழியாக வாதிகள் கிரையம் பெற்றதாக கருத்தில் கொள்ள இயலாது. நாளது வரை தாவா சொத்தானது 4 முதல் 8 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்பது பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் வழியாக அறியக்கூடிய நிலையில், வாதிகள் கோரக்கூடிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**3. எழுவினா 3க்கான தீர்வு : வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்மானித்துள்ள நிலையில், வாதிகளுக்கு இதர பரிகாரம் எதுவும் வழங்க வேண்டியதில்லை என்று

இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. தாவா சொத்துக்களை பொறுத்து நீதிமன்றத்தில் ஏற்கனவே அ.வ.எண்.277/1993 என்ற வழக்கில் தீர்முடிவு கண்டுள்ள நிலையில், மேற்படி சங்கதியை மறைத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் சொத்துக்களை வாதிகளுக்கு விற்பனை செய்துள்ளதால் 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது வாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து வேறு வழக்குகள்தாக்கல் செய்ய இவ்வழக்கு தடையாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு செலவு தொகை பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

**10. முடிவில்,**

வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்ததக்கதல்ல என்று இவ்வழக்கு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.04.24 18:50:58 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**வாதி தரப்பு சாட்சிகள் :**

வா.சா.1 – சாமியப்பன் – 1ம் வாதி

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | 30.10.1982 | 1ம் பிரதிவாதி குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | 14.12.1990 | 1ம் பிரதிவாதி ஒட்டன்சத்திரம் பேரூராட்சி நிர்வாகத்திற்கு எழுதிக்கொடுத்துள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 29.10.1993 | 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் எழுதிக்கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | 24.10.1994 | 1ம்வாதியும், 1ம் பிரதிவாதியும் எழுதிக்கொண்ட கிரைய உடன்படிக்கை கெடு நீட்டிப்பு ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | 06.12.1996 | தாவா 1ம் இலக்க சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து 1ம் வாதி கிரையம் பெற்ற ஆவணம் – அசல் | வா.சா.ஆ.5 |
| 6 | 06.12.1996 | தாவா 2ம் இலக்க சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து 2ம் வாதி கிரையம் பெற்ற ஆவணம் – அசல் | வா.சா.ஆ.6 |
| 7 | 21.11.1989 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா - ஜெராக்ஸ் | வா.சா.ஆ.7 |
| 8 | – | 01.01.1926 முதல் 19.06.1961 வரையிலான 1ம் இலக்க சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் – அசல் | வா.சா.ஆ.8 |

**பிரதிவாதி தரப்பு சாட்சி :**

பி.வா.சா.1 – திருலோகசந்திரன் – 8ம் பிரதிவாதி

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| 1 | 07.10.1996 | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி, நீதிமன்றத்தின் அ.வ.எண்.277/1993 என்ற வழக்கின் தீர்ப்பாணை–நீதிமன்ற நகல் | பி.வா.சா.ஆ.1 |
| 2 | 06.06.2016 | பட்டா எண்.1131 பட்டாவிற்கான நில உரிமை விபரபட்டியல் – கணினி நகல் | பி.வா.சா.ஆ.2 |

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.04.24 18:51:05 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**